# வரும் கல்வி ஆண்டு முதல், 2 ஆண்டாகிறது பி.எட்., படிப்பு

**சென்னை, ஜூன் 22-**

தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் திட்டவட்டமாக உள்ளதால் வரும் கல்வி ஆண்டில் முதல் பிஎட் படிப்பை 2 ஆண்டுகளாக உயர்த்த ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழ கம் முடிவு செய்துள்ளது.

நாடு முழுவதும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளிக் கும் அமைப்பான தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் (என்சிடிஇ) அமைப்பு ஓராண்டாக இருந்த பிஎட் படிப்பு காலம் 2 ஆண்டுகளாக உயர்த்தப்படும் என்று சமீபத்தில் அறி வித்தது. இதை எதிர்த்து தமிழகத்தில் தனியார் கல்வியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு சார்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடுக்கப் பட்டு அது நிலுவையில் உள்ளது.

பிஎட் படிப்பு 2 ஆண்டுகளாக உயர்த்தப்படும் சூழல் உருவாவதால் அதற்குரிய பாடத்திட்டத்தை தயா ரிக்கும் பணியை தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் மேற்கொண்டது. கோர்ட்டில் வழக்கு நிலுவையில் இருப்பதால் என்சிடிஇ உத்தரவின்படி பிஎட் 2 ஆண்டுகளாக உயர்த்தப்படுமா? அல்லது தொடர்ந்து ஓராண்டாகவே நீடிக்குமா? என்று மாணவர்கள் மத்தி யில் குழப்பம் உருவானது. இதற்கி டையே, ஆசிரியர் கல்வியியல் பல்க லைக்கழகம் தயாரித்த 2 ஆண்டு கால பாடத்திட்டத்துக்கு அதன் சிண்டி கேட் குழு கடந்த மே 20ம் தேதி ஒப்பு தல் அளித்தது. இந்நிலையில் என்சி டிஇ வழிகாட்டு விதிமுறைகளை வரும் கல்வி ஆண்டு முதல் எல்லா கல்லூரிகளிலும் நடை முறைப்ப டுத்த வேண்டும் என்று ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணை வேந்தருக்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதற்கான அரசா ணையை உயர்கல்வித்துறை 18ம் தேதி வெளியிட்டது. அதன்படி பிஎட் படிப்பு காலம் 2 ஆண்டுகளாக உயர்த்தப்பட வேண்டும். இதைய டுத்து ஆசிரியர் கல்வியியல் பல்க லைக்கழக கல்விக்குழுவின் கூட்டம் சென்னையில் 19ம் தேதி நடந்தது. துணைவேந்தர் விஸ்வநாதன் தலை மையில் நடந்த கூட்டத்தில் 24 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் பிஎட் படிப்பு காலத்தை வரும் கல்வி ஆண்டு முதல் 2 ஆண்டுகளாக உயர்த்த ஒப்புதல் பெறப்பட்டது.

இதுகுறித்து கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள் கூறியது: பிஎட் படிப்பு காலத்தை வரும் கல்வி ஆண்டு முதல் 2 ஆண்டுகளாக உயர்த்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பிஎட் ஓராண்டாக இருந்தபோது கற்பித்தல் பயிற்சி காலம் 40 நாட்களாக இருந்தது. இனிமேல் அது 20 வாரங்களாக இருக்கும். முதல் ஆண்டில் 6 வாரங்களும், 2ம் ஆண்டில் 14 வாரங்களும் ஆசிரியர் பயிற்சி பெறும் மாணவர்கள் ஏதாவது ஒரு பள்ளியில் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடுவர். கற்பித்தல் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்ப டும். மேலும் கம்யூட்டர் மற்றும் தக வல் தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தி பாடம் நடத்துதல், விளையாட்டு, யோகா, கலை ஆகிய வற்றுக்கு அதிக முக்கியத்துவம் தரப்ப டும். 2015-16-ம் கல்வி ஆண்டுக்கான பிஎட் மாணவர் சேர்க்கை தொடர்பான அறிவிப்பு ஜூலையில் வெளியிடப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.